நீலகிரி மாவட்டத்தில்

# பழங்குடியினர்களுக்கான 8 வாகனங்களின் சாவிகள்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு ஓட்டுநர்களிடம் வழங்கி தொடங்கி வைத்தார்



ஊட்டி, அக்.14-

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில், பள்ளி குழந்தைகளின் பயன்பாட்டிற்காக ரூ.41.33 இலட்சம் மதிப்பில் 3 பள்ளி வாகனங்கள் மற்றும் ரூ.85 இலட்சம் மதிப்பில் பழங்குடியினர்களுக்கான 5 நடமாடும் மருத்துவ வாகனங்கள் என 8 வாகனங்களுக்கான சாவிகளை நேற்று ஓட்டுநர்களிடம் வழங்கி, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் கலெக்டர் செய்;தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர்; (06.10.2025) அன்று திருச்சி, தருமபுரி, சேலம், கள்ளக்குறிச்சி, ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்கு 26 வாகனங்களை பழங்குடியின உண்டு உறைவிடப்பள்ளிகளின் பயன்பாட்டிற்காகவும், கோயம்புத்தூர், தர்மபுரி, ஈரோடு, நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு பழங்குடியின மக்களின் மருத்துவ பயன்பாட்டிற்காக 20 புதிய நடமாடும் மருத்துவ வாகனங்களையும் வழங்கினார்கள்.

இதில் நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியில் உள்ள ஜி.டி.ஆர் கார்குடி, ஜி.டி.ஆர் பொக்காபுரம், ஜி.டி ஆர் குஞ்சப்பணை ஆகிய 3 பள்ளிகளுக்கு தலா ஒரு பள்ளி வாகனங்களும், பழங்குடியின மக்களின் மருத்துவ பயன்பாட்டிற்காக 5 நடமாடும் மருத்துவ வாகனங்களும் வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் இந்த வாகனங்;கள் கொடியசைத்து அனுப்பி வைக்கப்பட்டது. பள்ளி வாகனங்கள் மற்றும் நடமாடும் மருத்துவ வாகனங்கள் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பீட்டர் ஞானராஜ், நீலகிரி ஆதிவாசிகள் நல சங்க செயலாளர் ஆல்வாஸ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# 15 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 3802 உறுப்பினர்களுக்கு ரூ.4.99 கோடி மதிப்பீட்டில் மிகை ஊதியம் மற்றும் பங்கு ஈவுத்தொகை

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்



ஈரோடு.அக்.14-

ஈரோடு மாவட்டம், சென்னிமலை, பசுவப்பட்டி பிரிவு, அம்மன் காட்டேஜ் மண்டபத்தில், சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 15 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 3802 உறுப்பினர்களுக்கு ரூ.4.99 கோடி மதிப்பீட்டில் மிகை ஊதியம் மற்றும் ஈவுத் தொகையினை, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பிற மாநிலங்கள் பின்பற்றுகின்ற வகையில் எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக முதலமைச்சரின் காலை உணவு திட்டம், அன்புக்கரங்கள் திட்டம், கட்டணமில்லா பேருந்து பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, வரும்முன் காப்போம், நம்மைக் காக்கும் 48, மக்களைத் தேடி மருத்துவம் என பல்வேறு திட்டங்கள் என அனைவரும் பயன்பெறும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் , இன்றைய தினம் சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் 3.9 கி.மீ நீளத்திற்கு சீரமைக்கப்பட்ட மலைப்பாதை தார்சாலை, ரூ.64.00 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து காத்திருப்புக்கூடம் மற்றும் ரூ.93.00 இலட்சம் மதிப்பீட்டில் பசுமடம் ஆகியவற்றை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கியுள்ளார்கள்.

மேலும், சென்னிமலையில் ரூ.482.36 கோடி மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர் திட்டம், பேரூராட்சி பகுதிகளுக்கு தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்கும் வகையில், கிணறு அமைத்து குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்கும் திட்டம், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் புறவழிச்சாலை அமைக்கும் பணி ஆகிய பணிகளும் நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக இன்றைய தினம், சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மிகை ஊதியம் மற்றும் ஈவுத் தொகை வழங்கும் விழா நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் வழங்கி வருவது போல், நெசவாளர்களுக்கும் முக்கியத்துவம் வழங்கி வருகிறார்கள். நெசவுத்தொழில் அழியாமல் பாதுகாப்பதிலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். நெசவாளர்களுக்கு மின்சாரத்தில் சலுகை, அடிப்படை கூலி மற்றும் ஈவுத்தொகையில் 10 சதவீதம் என வழங்கப்பட்டு வருகிறது.

சென்னிமலை பகுதியில் உள்ள 26 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 8647 உறுப்பினர்கள் செயல்பட்டு வருகின்றனர். மேற்படி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் 2024-2025 ஆம் ஆண்டில் ரூ.9920.10 இலட்சம் அளவிற்கு ஜவுளிகள் விற்பனையில் நிகர இலாபமாக ரூ.652.22 இலட்சம் ஈட்டியுள்ளது. இதில் 15 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தை சார்ந்த 3802 உறுப்பினர்களுக்கு ரூ.4.79 கோடி மதிப்பீட்டில் மிகை ஊதியம் (Bonus) மற்றும் ரூ.20.11 இலட்சம் மதிப்பீட்டில் பங்கு ஈவுத்தொகையாக என மொத்தம் ரூ.4.99 கோடி மதிப்பீட்டிலான தொகை இன்றைய தினம் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், எக் கட் டாம் பா ளை யம் ஊராட்சி, மேட்டூர் ஏரிக்கரையில் பனை மர விதைகள் நடும் திட்டத்தின் கீழ், 1800 பனை விதைகள் நடும் பணியினை துவக்கி வைத்தார்.

**கலந்து கொண்டோர்**

இந்நிகழ்ச்சியில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி, திருப்பூர் மாநகராட்சி 4-ம் மண்டல குழுத்தலைவர் இல.பத்மநாபன், உதவி இயக்குநர் (கைத்தறி) சரவணன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

# ஊட்டி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்



ஊட்டி, அக்.14-

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு, பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா, முதியோர், விதவை, கல்வி உதவி தொகை, வங்கி கடன், சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 133 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும்; மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள்; உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கவிதை போட்டி, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற 18 மாணவ, மாணவிகளுக்கு முதல் பரிசு ரூ.10,000- இரண்டாம் பரிசு, 7,000- மூன்றாம் பரிசு ரூ.5,000-த்திற்கான காசோலைகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களையும், உங்;களுடன் ஸ்டாலின் முகாமில்; நடுவட்டம் டி.ஆர் பஜார் பகுதியை சேர்ந்த கஜலட்சுமி என்பவர் தையல் இயந்திரம் வேண்டி விண்ணப்பம் அளித்திருந்தார்.

இதனை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ஆய்வு செய்து இன்றைய தினம் மேற்கண்ட நபருக்கு ரூ.7,000- மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரத்தினையும், பிரதான் மந்திரி ஜன்ஜோதி ஆதிவாசி நியாய மகா அபியான் யோஜனா திட்டத்தின் கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் கட்டப்பட்ட 929 வீடுகளுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு அதற்கான சான்றிதழ்களை ஊரக வளர்ச்சித்துறை அலுவலரிடம் (குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரசேகர்) கலெக்டர் வழங்கினார்.

இக் கூட் டத் தில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராதாகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பழனிச்சாமி (நிலம்) மற்றும் பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**நீலகிரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநராக ந.மணிகண்டன் பொறுப்பேற்றுக்கொண்டார். அவருக்கு பேரூராட்சி செயல் அலுவலர்கள், அலுவலக பணியாளர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.**

# ஈரோடு மாவட்ட குலாலர் சங்கத்தின் 36 வது ஆண்டு விழாவில் மாணவ, மாணவிகளுக்கு பரிசு




ஈரோடு அக் 14-

ஈரோடு மாவட்ட குலாலர் சங்கத்தின் 36 வது ஆண்டு மாணவ மாணவிகளுக்கு கல்வி பரிசளிப்பு விழா, மண்பாண்ட கலைஞர்களுக்குப் பாராட்டு விழா, சங்கத்தின் மூத்த முன்னோடிகளுக்கு விருது வழங்கும் விழா என முப்பெரும் விழா கோபிசெட்டிபாளையம் சீதா கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் ஈரோடு மாவட்ட குலாலர் சங்க கல்வி பரிசளிப்பு அறக்கட்டளை தலைவர் கா.பா.ஆறுமுகம் தலைமை வகித்தார்.ஈரோடு மாவட்ட குலாலர் சங்கத் தலைவர் கனகராஜ் வரவேற்றார். மாவட்ட செயலாளர் சக்திவேல் ஆண்டறிக்கை வாசித்தார். மாவட்ட பொருளாளர் தாமரைக்கண்ணன் நிதிநிலை அறிக்கை வழங்கினார்.

தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர்கள் (குலாலர்) மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் சங்க மாநிலத் தலைவர் டாக்டர் சேம. நாராயணன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு விழா பேருரை ஆற்றி மாணவ மாணவிகளுக்கு கல்வி பரிசளிப்பு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாநில துணை தலைவர் சுந்தரமூர்த்தி, ஈரோடு மாவட்ட தேர்தல் ஆணையாளர் அந்தியூர் நல்லசாமி மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர் லோகநாதன் நாமக்கல் மாவட்ட தலைவர் சிங்காரவேலு மற்றும்நிர்வாகிகள், சேலம் மாவட்ட தலைவர் திருநாவுக்கரசு மாவட்ட செயலாளர் கதிர்வேல், மற்றும் நிர்வாகிகள் கோவை மாவட்ட தலைவர் ராஜகோபால் மற்றும் நிர்வாகிகள் திருப்பூர் மாவட்ட பொருளாளர் பாலகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப் பித் த னர். முன் ன தாக மாணவர்களுக்கு கல்வி வழிகாட்டுதல் குறித்து கல்வியாளர் கோயமுத்தூர் வெங்கடாசலம் பேசினார்.

ஈரோடு மாவட்டதை சார்ந்த மாநில மாவட்ட கிளை மன்றத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மண்பாண்ட தொழிலாளர்களுக்கு அரசு குளங்களில் களிமண்ணை இலவசமாக எடுத்துக் கொள்ள ஆணை வழங்கியதற்கு நன்றி தெரிவிப்பது. தமிழ்நாடு மண்பாண்ட தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் மற்றும் உறுப்பினர் குழு அமைக்க வேண்டுதல், பண்பாண்ட தொழில் செய்யும் குலால சமுதாயத்திற்கு நாடாளுமன்ற சட்டமன்ற உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் வழங்க வேண்டுதல், பாரத நாட்டை 2000 ஆண்டுகளுக்கு முன்பு காடு ஆறு மாதம் நாடு ஆறு மாதம் என ஆண்டு வந்த விக்கிரமாதித்தனை வென்று வீழ்த்திய 56 தேசத்தையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த அன்னை பராசக்தியின் அருளை பெற்ற பேரரசர் மாவீரர் சாலிவாகனன் திருவருட்சிலையும் மணிமண்டபமும் அமைத்து தர வேண்டுமென தமிழக அரசை கேட்டுக் கொள்வது எனவும், தைப் பொங்கல் திருநாளில் தமிழக அரசின் சார்பில் பொங்கல் பொருட்கள் வழங்கி வருவதுடன் மண்பானையும் மண் அடுப்பும் வழங்க வேண்டுதல் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியின் முன்னதாக பரதநாட்டியம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்டம் முழுவதும் இருந்து திரளானோர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# பலத்த காற்றுடன் கூடிய கனமழை மஞ்சூர்- கோவை சாலையில் பாறைகள் விழுந்து போக்குவரத்து பாதிப்பு



ஊட்டி, அக்14-

பலத்த காற்றுடன் கூடிய மழை காரணமாக மஞ்சூர்-கோவை சாலையில் பாறைகள் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்தமிழக கடலோர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி தொடர்வதால் மேலும் 2 நாட்களுக்கு நீலகிரி உள்பட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு மழை உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு வெளியிட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் முதல் நீலகிரியின் பல்வேறு பகுதிகளை தீவிர மழை பெய்து வருவதால் பல இடங்களில் ஈரப்பதமாக காணப்படுகிறது. சாலையோரங்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.


இந்த நிலையில் நேற்று காலை சுமார் 6 மணியளவில், மஞ்சூர்- கோவை சாலையில் வனப்பகுதிக்குள் உள்ள பெரும்பள்ளம் மலைப்பாதையில் ராட்சத பாறைகள் உருண்டு விழுந்து கிடந்தன. இதனால் அந்த வழியாக போக்குவரத்து பாதிக்கப்பட்டு வாகனங்கள் நீண்ட தூரம் அணிவகுத்து நின்றன.

இது குறித்த தகவலின் பெயரில் நெடுஞ்சாலைத் துறை நீலகிரி கோட்ட பொறியாளர் குழந்தை ராஜ் உத்தரவின் பேரில் உதவி கோட்ட பொறியாளர் ராஜா தலைமையிலான குழுவினர் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு செய்து பொக்லின் வாகனம் மூலம் பாறைகளை உடைத்து அகற்றினர். சுமார் 12 மணியளவில் பாறைகள் அனைத்தும் அகற்றப்பட்டு போக்குவரத்து சீரானது.

முன்னதாக பாறைகள் விழுந்து கிடந்த இடம் அடர்ந்த வனப்பகுதி மற்றும் யானைகள் நடமாடும் பகுதி என்பதால் வாகனத்தை விட்டு யாரும் கீழே இறங்க வேண்டாம் என அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இதேபோல் சாலைகளில் பல்வேறு இடங்களில் லேசான மண் சரிவு ஏற்பட்டு இருந்தது இவை அனைத்தும் சரி செய்யப்பட்டன.

இதேபோல் நீலகிரி மாவட்டத்தில் இன்றும் பல்வேறு இடங்களில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

# எமரால்டு அணையிலிருந்து 1000 கன அடி நீர் திறப்பு: கரையோர மக்கள் பாதுகாப்பாக இருக்க எச்சரிக்கை



ஊட்டி, அக்.14-

காட்டுக்குப்பை பகுதியில் புதிய நீர் மின் நிலைய பணிகளுக்காக எமரால்டு அணையிலிருந்து வினாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. கரையோரத்தில் உள்ள பொதுமக்கள் வரும் 30 நாட்களுக்கு பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் குந்தா திட்டம் உள்பட 13 அணைகள் மூலம் தினசரி 832 மெகாவாட் நீர் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் நிலக்கரி மூலம் மின் உற்பத்தி செய்வதை விட நீர்மின் திட்டம் மூலம் மின் உற்பத்திக்கு குறைந்த செலவு என்பதால் கூடுதலாக நீர் மின் உற்பத்தி பணிகளில் அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக ஊட்டி அருகே காட்டுக்குப்பை பகுதியில், மலைகளைக் குடைந்து ரூ. 1,850 கோடி மதிப்பில், 500 மெகாவாட்டுக்கான குந்தா நீரேற்று மின் திட்ட பணிகள் கடந்த சில ஆண்டுகளாக நடந்து வருகிறது.

2 கிலோ மீட்டர் தூரம் சுரங்கப்பாதை அமைக்கும் பணி முடிந்து கட்டுமான பணிகள் மற்றும் மின் சாதனங்கள் பொருத்துவது உள்ளிட்ட பணிகள், 80 சதவீதம் நிறைவடைந்துள்ளது.

குந்தா நீரேற்று மின் திட்டம் பணிகள் நடக்கும் பகுதியை ஒட்டியுள்ள எமரால்டு, போர்த்திமந்து அணைகளில் தண்ணீர் முழு கொள்ளளவில் இருப்பதால் பணிகளுக்கு இடையூறு ஏற்படாமல் இருக்க, எமரால்டு, போர்த்திமந்து அணையிலிருந்து நீர் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடந்த இரு வாரங்களாக எமரால்டு அணையில் இருந்து சுரங்கப்பாதை வழியாக குந்தா அணைக்கு தண்ணீர் கொண்டு வரப்பட்டு குந்தா அணையில் இருந்து இரு மதகுகள் வழியாக வினாடிக்கு, 1000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வந்தது.

இந்தநிலையில் போர்த்திமந்து அணையில் உள்ள தண்ணீரை எமரால்டு அணைக்கு கொண்டு வந்து வெளி யேற் றப் பட்டு, நீரோடை வழியாக குந்தா அணையில், இரண்டு மதகுகள் வழியாக மீண்டும் வெளியேற்ற திட்டமிடப்பட்டு நேற்று முதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதன்படி எமரால்டு அணையில் இருந்து வினாடிக்கு ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கபட்டுள்ளது.

இதுகுறித்து நீர்மின் திட்ட மேற்பார்வை பொறியாளர் பிரபு கூறுகையில், எடக்காடு கால்வாய் வழியாக குந்தா அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. அணையில் இருந்து சுமார் 70 அடிக்கு தண்ணீர் குறைக்கப்பட உள்ளது. எனவே எமரால்டு கால்வாயின் கரையோரத்தில் உள்ள பொதுமக்கள் வரும் 30 நாட்களுக்கு பாதுகாப்பாக இருக்குமாறு உதவி ஏதேனும் தேவைப்பட்டால் நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் கட்டுப்பாட்டு அறை அவசர எண் 10 77 தொடர்பு கொள்ளலாம்.மேலும் தாழ்வான பகுதியில் குடியிருந்து வரும் மக்கள் மேலான பகுதிக்கு செல்ல வேண்டும். பொதுமக்கள் நீரோடைக்கு அருகில் செல்லவோ நடக்கவோ கூடாது. நீரோடையில் இறங்கி குளிக்கவும் வாகனங்கள் மூலம் கடக்கவும் கூடாது என்றார். அணைப்பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீர் இத்தலார் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் வழியாக செல்வதால் பாதுகாப்பு கருதி ஊராட்சி வாகனம் மூலம் எச்சரிக்கை அறிவிப்பு தொடர்ந்து வெளியிட்டு வருவதாக வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்ரீ தரன் தெரிவித்தார்.

**வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்**

## ஊட்டி அன்பு, அறிவு, அறக்கட்டளை இல்லம் ஓராண்டு நிறைவு விழா கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தீபாவளி பரிசு தொகுப்பு வழங்கினார்



**ஊட்டி, அக்.14-**

ஊட்டி அன்பு, அறிவு, அறக்கட்டளை இல்லம் ஓராண்டு நிறைவு விழாவில் முதியோர்களுக்கு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தீபாவளி பரிசு தொகுப்பு வழங்கினார்.

ஊட்டி நகராட்சிக்குட்பட்ட முள்ளிக்கொரை பகுதியில் நகராட்சி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் தனியார் மூலம் நடத்தப்பட்டு வரும் அன்பு அறிவு அறக்கட்டளை இல்லம்;; ஓராண்டு நிறைவு பெற்றதை முன்னிட்டு, ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் காப்பி வித் கலெக்டர் எனும் நிகழ்ச்சி, மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது.

இந் நி கழ் வில் ;, மாவட்ட கலெக்டர் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அன்பு, அறிவு, அறக்கட்டளை இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்களுக்கு தீபாவளி பரிசு பொருட்கள் தொகுப்பினை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

முன்னதாக, அன்பு, அறிவு, அறக்கட்டளை இல்லத்திற்கு பல்வேறு பணிகள் மற்றும் உதவிகளை செய்தமைக்காக அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் தனியார்களுக்கு நினைவு பரிசுகளை கலெக்டர் வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ்.நிஷா, தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் ஷிபிலா மேரி, வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், நகராட்சி ஆணையாளர் எம்.கணேசன், சமூக நலத்துறை அலுவலர் பிரவீணா தேவி, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குப்புராஜ், ரெட்கிராஸ் சேர்மன் பேராசிரியர் கோபால், முன்னாள் சேர்மன் கேப்டன் கே.ஆர்.மணி, அன்பு அறிவு அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் பிரிட்டோ உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அடிப்படை வசதிகள் செய்து தர வலியுறுத்தி நெல்லியாளம் அம்மன்காவு பகுதி மக்கள் கலெக்டருக்கு மனு

**ஊட்டி, அக்.14-**

நெல்லியாளம் அம்மன் காவு பகுதிக்கு அடிப்படை வசதிகள் செய்து தர வலியுறுத்தி நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் மனு கொடுத்தனர்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று பொதுமக்கள் குறை தீர்ப்பு கூட்டம் நடைபெற்றது கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுநல அமைப்பினர், சமூக ஆர்வலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டு மனுக்கள் கொடுத்தனர்.

இதில் நீலகிரி மாவட்டம் கூடலூரை அடுத்த சேரங்கோடு ஊராட்சிக்குட்பட்ட அம்மன்காவு பகுதி மக்கள் கொடுத்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:-

அம்மன் காவு சுற்று வட்டார பகுதி கிராமங்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்த பகுதிகளுக்கு செல்லும் சாலைகள் மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது.

இந்த ஊராட்சிக்குட்பட்ட 7 மற்றும் 8-வது வார்டுகளில் உள்ள சாலைகளில் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளது. இந்த சாலையில் தான் நாள் தோறும் தேயிலை தொழிற்சாலைகளுக்கு செல்லும் வாகனங்கள், பள்ளிச் செல்லும் வாகனங்கள், ஆட்டோ மற்றும் ஜீப் போன்ற வாகனங்கள் செல்கின்றன.

ஆனால், குண்டும் குழியுமான இந்த சாலையில் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாவட்ட கலெக்டர் இந்த பகுதியில் உள்ள சாலைகளை சீரமைத்து தர வேண்டும்.

மேலும், தடுப்பு சுவர்கள் அமைக்க வேண்டும். சாலைகளில் இன்டர்லாக் கற்கள் பதிக்க வேண்டும். கொளப்பள்ளி கல்கோரி முதல் நெல்லியாளம் வரையுள்ள தார் சாலை அமைக்க வேண்டும். கொளப்பள்ளி முதல் பாலவயல் சாலை அமைக்க வேண்டும். பொட்டசேரா முதல் பொன்னாணி வரை தார் சாலை அமைக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு உள்ளது.

நீலகிரி மாவட்ட ஆதிதிராவிட மகாஜன சபை தலைவர் குமார் செயலாளர் மகேந்திரன் தலைமையில் கொடுத்த மனுவில், ஊட்டி பஸ் நிலையம் எதிரில் உள்ள பாறை முனீஸ்வரர் ஆலயம் உள்ளது, இந்த கோவிலின் அருகில் உள்ள காலி இடத்தை 100 வருடமாக பூஜை பணிகளுக்கு பயன்படுத்தி வருகிறோம்.

ஆறு தலைமுறையாக இந்த கோவிலை நிர்வகித்து வரும் பூசாரிகள் பரம்பரையாக அங்கு வசித்து வருகின்றனர். தற்போது அருகில் அறிவியல் பூங்கா பணிக்காக கோவில் வளாகம் அருகில் உள்ள இடத்தை எடுக்க நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்கு தகுந்த தீர்வு தர வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

## இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், அறுபடை வீடுகளுக்கு ஆன்மீகப் பயணம்: கலெக்டர் ச.கந்தசாமி துவக்கி வைத்தார்



**ஈரோடு,அக்.14-**

ஈரோடு, திண்டல், வேலாயுதசாமி திருக்கோயில் அடிவாரத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், 100 பக்தர்களை அறுபடை வீடுகளுக்கு ஆன்மீகப் பயணம் மேற்கொள்ள அழைத்து செல்லும் வாகனங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி துவக்கி வைத்தார்.இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை, சுற்றுலாத்துறை இணைந்து ஏழை, எளிய மக்கள், முதியோர்களுக்கு ஆன்மீகத் தலங்களுக்கு அழைத்து செல்ல அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி, ஆடி வெள்ளிக் கிழமைகளில் அம்மன் கோயில்களுக்கு பயனாளிகள் ஆன்மீகப் பயணமாக அழைத்து செல்லப்பட்டார்கள். மேலும், மானசரோவர் கோயிலுக்கு பயணம் செல்பவர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, இன்றைய தினம் ஈரோடு மாவட்டத்தில் 60 முதல் 70 வயதிற்குட்பட்ட வருடத்திற்கு ரூ.2.00 இலட்சத்திற்கு கீழ் வருமானம் உள்ள 100 பயனாளிகளை தேர்ந்தெடுத்து 13.10.2025 முதல் 16.10.2025 வரை 4 நாட்கள் பயணமாக, பழனி பாலதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், பழமுதிர்சோலை சோலைமலை முருகன் திருக்கோயில், சுவாமி மலை சுவாமி நாதசுவாமி திருக்கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் என அறுபடை வீடுகளுக்கு 3 பேருந்துகள் மூலம் அழைத்து செல்லும் ஆன்மீகப் பயணம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக சுற்றுலா தளங்களை வளர்ச்சி செய்வதற்கும் உதவியாக இருக்கும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அ.தி.பரஞ்சோதி, உதவி ஆணையர் சுகுமார், பவானி சங்கமேஸ்வரர் திருக்கோயில் உதவி ஆணையர் அருள்குமார், திண்டல் வேலாயுதசுவாமி திருக்கோயில் செயல் அலுவலர் த.ஜீவலட்சுமி, இணை ஆணையர் நேர்முக உதவியாளர் பாண்டியம்மாள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தின பூமி நாளிதழ் படியுங்கள்

ஈரோடு சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில்

## ரூ.8.27 கோடி மதிப்பீட்டில் மலைப்பாதை தார்சாலை, பேருந்து காத்திருப்புக்கூடம் மற்றும் திருப்பணிகள்: முதல்வர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்

### செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார்





**ஈரோடு,அக்.14-**

தமிழ்நாடு முதலமைச்சர், ஈரோடு மாவட்டம், சென்னிமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் 3.9 கி.மீ நீளத்திற்கு சீரமைக்கப்பட்ட மலைப்பாதை தார்சாலை, ரூ.64.00 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து காத்திருப்புக்கூடம் மற்றும் ரூ.93.00 இலட்சம் மதிப்பீட்டில் பசுமடம் ஆகியவற்றை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்கிய நிகழ்வில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு பார்வையிட்டார்.

பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் வசதிக்காக, சென்னிமலை சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு மலைப்பாதை அமைக்க 09.12.1961-ல் ஆய்வு செய்யப்பட்டு தமிழ்நாட்டில் முதல்முதலாக சென்னிமலையில் மலைப்பாதை அமைக்க அதற்கான திட்டம் மற்றும் மதிப்பீடு தயார் செய்து திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் மலைப்பாதை அமைக்கும் பணி 15.02.1963 அன்று துவக்கி வைக்கப்பட்டு, திருக்கோயில் மூலம் மண்பாதை சாலை அமைக்கப்பட்டு முதலில் கார் மட்டும் செல்லலாம் என தெரிவிக்கப்பட்டதின் பேரில் 15.02.1964 அன்று கார் மட்டும் அனுமதிக்கப்பட்டது. மலைப்பாதை சாலை பயன்பாட்டிற்கு வந்தாலும் 25.08.1964 அன்று தான் மலைப்பாதை அதிகாரப்பூர்வமான திறப்பு விழா நடைபெற்றது.

தொடர்ந்து, கப்பிப் பாதை, தார் சாலை மற்றும் ஓரம் தடுப்பு சுவர் கட்டுதல் பணிகள் அனைத்தும் திருக்கோயில் நிர்வாகம் மூலம் நிதி செலவிட்டு 60 ஆண்டுகளுக்கு மேலாக தற்போது வரை திருக்கோயில் பராமரிப்பில், பயன்பாட்டில் இருந்து வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் சட்டமன்ற அறிவிப்பு 2023-2024-ல் திருக்கோயில் நிதி மூலம் சென்னிமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் மலைப்பாதை தார்சாலை சீரமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி, இன்றைய தினம் பக்தர்கள் மற்றும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் ரூ.6.70 கோடி மதிப்பீட்டில் 3.9 கி.மீ நீளத்திற்கு சீரமைக்கப்பட்ட மலைப்பாதை தார்சாலை பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் பயன்பாட்டிற்கு 27 அடி அகலம் வனத்துறையால் வழங்கப்பட்டு தற்போது 4 மீட்டர் தார்சாலையினை 6 மீட்டர் தார்சாலையாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பக்தர்கள் வசதிக்காக ரூ.64.00 இலட்சம் மதிப்பீட்டில் பேருந்து காத்திருப்புக்கூடம் மற்றும் ரூ.93.00 இலட்சம் மதிப்பீட்டில் பசுமடம் ஆகிய முடிவுற்ற திருக்கோயில் பணிகளையும் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்துள்ளார்கள்.

பக்தர்கள் மலைக்கோயிலுக்கு செல்ல அடிவாரத்திலிருந்து 1320 திருப்படிகள் கொண்ட படிவழிப்பாதையும், வாகனங்கள் மூலம் செல்ல 3.9 கி.மீ நீளமுள்ள தார் வழிச்சாலையும் உள்ளது. பக்தர்கள் அடிவாரத்திலிருந்து மலைக்கோயிலுக்கு சென்று வர திருக்கோயில் மூலம் இரண்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. சென்னிமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வாராந்திர செவ்வாய்க்கிழமை நாட்களில் சுமார் 10000 நபர்களும், மாதாந்திர அமாவாசை, சஷ்டி, கிருத்திகை நாட்களில் சுமார் 5000 நபர்களும், இதர உற்சவ நாட்களான சித்திரை-1 20000 பக்தர்களும், வைகாசி விசாகம்-7000 பக்தர்களும், ஆடி அமாவாசை 25000 பக்தர்களும், கந்த சஷ்டி சூரசம்ஹாரம் 20000 பக்தர்களும், வருடாந்திர தைப்பூச தேர்த்திருவிழா நாட்களில் 100000 பக்தர்களும், பங்குனி உத்திர தேர்த் திருவிழாவிற்கு 20000 பக்தர்களும் வருகை புரிந்து வருகிறார்கள். திருக்கோயிலுக்கு வருகை புரியும் எண்ணற்ற பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இந்த சாலை மேம்பாடு பெரிதும் பயனளிக்கும் வகையில் அமையும்.

இந் நி கழ் வில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சி.சரஸ்வதி, சென்னிமலை பேரூராட்சி தலைவர் ஸ்ரீதேவி, திருப்பூர் மாநகராட்சி 4-ம் மண்டல குழுத்தலைவர் இல.பத்மநாபன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அ.தி.பரஞ்சோதி, உதவி ஆணையர் சுகுமார், ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, திருக்கோயில் செயல் அலுவலர் சரவணன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

செயற்கை நுண்ணறிவின் வாக்குறுதி மற்றும் அபாயம்:

## அனைவர் நிதிக்காக பொறுப்பான நுண்ணறிவு அவசியம் — என்பிசிஐ தலைவர் அஜய் குமார் சௌதரி அறிவுறுத்தல்

கோவை ,அக் 14-

செயற்கை நுண்ணறிவு இன்று நிதித் துறையின் மையத்திற்கே நுழைந்து, சேவைகளை வடிவமைக்கும், வழங்கும் மற்றும் அனுபவிக்கும் விதத்தையே மாற்றி வருகிறது என தேசிய கட்டண நிறுவனம் யின் நிர்வாகத் தலைவரும் சுயாதீன இயக்குநருமான அஜய் குமார் சௌதரி தெரிவித்தார்.மும்பையில் நடைபெற்ற ஆறாவது உலக நிதி தொழில்நுட்ப விழா 2025-இல் "ஏஐ யின் வாக்குறுதி மற்றும் அபாயம்: அனைவர் நிதிக்காக பொறுப்பான நுண்ணறிவை உருவாக்குவது" என்ற தலைப்பில் அவர் சிறப்பு உரையாற்றினார். சௌதரி கூறியதாவது:" ஏஐ திறக்கின்ற வாய்ப்புகள் அளவற்றவை, ஆனால் அவை பொறுப்புடன் நிர்வகிக்கப்படாவிட்டால் நிதி அமைப்புகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும். பொறுப்பான ஏஐ என்பது ஒரு கோஷமல்ல – அது நம் எதிர்காலத்தின் வழிகாட்டி."அவர் குறிப்பிட்டதாவது, வங்கி, காப்பீடு, முதலீடு மற்றும் கட்டண துறைகளில் ஏஐ முதலீடு 2027க்குள் அமெரிக்க டாலர் 100 பில்லியன் ஆகும் என மதிப்பிடப்படுகிறது. தற்போது 78% நிதி நிறுவனங்கள் குறைந்தது ஒரு துறையில் ஏஐ யை பயன்படுத்துகின்றன.ஏஐ யின் உருவாக்கும் மற்றும் சுயநினைவு வடிவங்கள் மோசடி கண்டறிதல், ஒழுங்கு பின்பற்றல், வர்த்தக துல்லியம் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் என அவர் கூறினார். இது வணிகர்களுக்கான ஆன்லைன் கட்டண முறைகளை ஒரே தரத்தில் கொண்டு வரும். "ஏஐ யின் உண்மையான சோதனை — அது நிதி அமைப்பின் நிலைத்தன்மையை வலுப்படுத்துகிறதா அல்லது பலவீனப்படுத்துகிறதா என்பதில்தான் உள்ளது. நிதி துறையை மேலும் உறுதியாக்கும் கருவியாக ஏஐ பயன்பட வேண்டும்; அது நிலையின்மையின் காரணமாக மாறக் கூடாது. இது நம் அனைவரின் பொறுப்பு. நாம் பார்வையுடன், ஒழுக்கத்துடன், பொறுப்புடன் செயல்பட்டால், ஏஐ நிதி அணுகலை விரிவுபடுத்தி, தாங்கும் ஆற்றலை வளர்த்து, வளர்ச்சியை இன்னும் அனைவருக்கும் சேர்த்ததாக மாற்றும். ஆனால் இதை நாம் அலட்சியப்படுத்தினால், நாம் தவிர்க்க விரும்பும் பலவீனங்களையே அது பெரிதாக்கி விடும்." ஏஐயின் உருவாக்கும் மற்றும் சுயநினைவு வடிவங்கள் மோசடி கண்டறிதல், ஒழுங்கு பின்பற்றல், வர்த்தக துல்லியம் மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் என அவர் கூறினார்.

## பெரும்பாலான இருதய நோயாளிகள் 50 வயதுக்குட்பட்டவர்கள் டாடா ஏஐஜி ஆய்வு முடிவுகள் தகவல்

கோவை, அக் 14:

ஆரம்பகால எச்சரிக்கை அறிகுறிகளைப் பற்றிய பரவலான அறியாமை மற்றும் மோசமான நிதித் தயார்நிலை ஆகியவற்றுடன் இளம் இந்தியர்கள் கடுமையான இருதய நோய்களை எதிர்கொள்ளும் அபாயகரமான போக்கை வெளிப்படுத்துகின்ற வகையில், இந்தியாவின் முன்னணி பொது காப்பீட்டு வழங்குநர்களில் ஒன்றான டாடா ஏஐஜி ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கிட்டத்தட்ட 300 இருதயநோய் நிபுணர்களிடம் நாடு தழுவிய அளவில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகளை வெளியிட்டது. கடந்த பத்தாண்டுகளில் இருதய நோய் சிகிச்சை துறையில் ஏற்பட்ட வியத்தகு மாற்றத்தை இந்த ஆய்வு முக்கியப்படுத்தி காட்டுகிறது. 74% மருத்துவர்கள் தங்கள் நோயாளிகளில் பெரும்பாலோர் இப்போது 50 வயதுக்குட்பட்டவர்கள் என்று தெரிவிக்கின்றதன் மூலம் இளம் இந்தியர்களை இருதய நோய் எவ்வாறு அதிகளவில் பாதிக்கிறது என்பதை இந்த ஆய்வு எடுத்துக்காட்டுகிறது, தற்போது, இருதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குள் 31-40 வயதுக்கு உட்பட்டவர்கள் அடங்குவதை 36% மருத்துவர்கள் காண்கின்றனர், அதே நேரத்தில் 38% பேர் 41-50 வயதுடைய இருதய நோயாளிகளை காண்கின்றனர். இது, கடந்த தசாப்தத்தில் 87% இதய நோயாளிகள் 41 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்த நிலையின் ஒரு முழு மாறுபாட்டைக் காட்டுகிறது. இந்த கணக்கெடுப்பின் முடிவுகள் குறித்து பேசும் போது, கன்ஸ்யூமர் க்ளைம்ஸ் மூத்த நிர்வாக துணைத் தலைவர் மற்றும் தேசிய தலைவர் ராஜகோபால் ருத்ரராஜூ கூறுகையில் இந்தியாவின் இதய நோய் சவால் ஆனது ஒரு மருத்துவ ரீதியாகவும் ஒரு நிதி ரீதியாகவும் உள்ளது என்பதை அங்கீகரிப்பது முக்கியமானதாக இருக்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், இதயவியல் சிகிச்சைச் செலவு கிட்டத்தட்ட 65% அதிகரித்துள்ளது. சுகாதார நிகழ்வுகளுக்குத் திட்டமிடுவது எவ்வளவு முக்கியம் என்பதை இந்த திடீர் அதிகரிப்பு முக்கியபடுத்தி காட்டுகிறது. என்று கூறினார்.ஆச்சரியகரமாக, ஒரு வியப்பூட்டும் வகையில் 78% மருத்துவர்கள் நோயாளிகள் இதய பிரச்சினைகளின் மிக முக்கியமான ஆரம்ப எச்சரிக்கை அடையாளமான மார்பு வலி அல்லது அசௌகரியத்தை வெளிப்படையாக புறக்கணிக்கிறார்கள் என்று தெரிவித்துள்ளனர்.




**ஈரோடு அரசு தொடக்கப் பள்ளியில் முப்பரும் விழாவில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஈரோடு கிழக்கு சட்ட மன்ற உறுப்பினர் ,வி.சி.சந்திரகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு விழாவினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்கள்.**

## நந்தா பொறியியல் கல்லூரியில் தமிழ் திருவிழா



**ஈரோடு அக் 14-**

நந்தா பொறியியல் கல்லூரியின் இளம் பொறியாளர்கள் துறை சார்பில் முதலாமாண்டு மாணவர்களுக்கு தமிழ் கலாச்சாரம் மற்றும் மரபுகளை நினைவு கூர்ந்து, உற்சாகப்படுத்தும் வகையில் தமிழ்த் திருவிழா நடைபெற்றது.

"இளந்தமிழ "25" என்கிற தலைப்பில் நடைபெற்ற விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமை தாங்கி பேசினார் .சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் முனைவர் இரா. விஸ்வநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி மற்றும் துறைத் தலைவர் பேராசிரியர் ஆர். திருநீலகண்டன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்

, புவிசார் குறியீட்டு பொருள்கள், தமிழரின் பண்டைய விளையாட்டுகள். தமிழரின் பாரம்பரிய இசைக்கருவிகள், சிறுதானியங்கள் மற்றும் பண்டைய திராவிட நாகரிகம் போன்ற பல்வேறு தமிழர் மரபுகளைப் பறைசாற்றும் வகையிலான புகைப்படங்கள் அடங்கிய கண்காட்சியினை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து, தமிழ் கலாச்சாரத்தினை நினைவூட்டும் வகையில் ஒயிலாட்டம், சிலம்பாட்டம், கும்மியாட்டம், பரதநாட்டியம் போன்ற பல்வேறு வகையான கலை நிகழ்வுகளை முதலாமாண்டு மாணவர்கள் மேடையில் அரங்கேற்றி, விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் உற்சாகப்படுத்தினார்கள்.

சிறப்பான ஏற்பாடு இத் திருவிழாவினை முறையில் செய்திருந்த ஒருங்கிணைப்பாளர்களான உதவி பேராசிரியர்கள் . டி. அசோக்குமார் மற்றும் எஸ். மணிமேகலை ஆகியோர்க்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் திருமதி பானுமதி சண்முகன், செயலர் திரு. எஸ்.நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர் எஸ்.திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே.வேலுசாமி ஆகியோர் பாராட்டி, தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்.



**சுரண்டை காமராஜர் அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற கலைத் திருவிழாவில் சிறப்பு விருந்தினராக தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவ,மாணவிகளுக்கு கோப்பையை வழங்கினார்.**

